www.tamilarangam.net



# ஈழம்: தோல்வி கண்டதா? தோற்கடிக்கப்பட்டதா?




தாமரை காருண்யன்

காரணம் தேடும் கட்டுரைத் தொடர்....

நுழைவாயிலில்.....

நமது சமகால நிகழ்வுகளை ஒரு வரலாற்றுப் பதிவாக்கும் முயற்சிதான் இது. உணர்ச்சிவயப்பட்டோ, அல்லது பரபரப்புத் தேடியோ மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியல்ல. சொந்த அனுபவத்தின் ஊடாக - எழுதுபவரையும் வரலாற்றின் ஒரு பகுதியாக்கி மேற்கொள்ளப்படும் பதிவும் அல்ல.

அதே சமயம், இது நமது மனதையெல்லாம் குடைந்து கொண்டிருக்கும் ஒரு முக்கியமான கேள்விக்குப் பதில் தேடும் முயற்சி. ஏன் நாம் தோற்றுப் போனோம்?

இதுவே நாம் பதில் காண முனையும் கேள்வி.

2000 ஆண்டு புது யுகத்தில் நுழைந்த போது ஒரு வெற்றிப் பெருமிதத்துடன் தான்; நாம் இருந்தோம். வெற்றிக்கான சகல அடித்தளங்களையும் கொண்டிருந்ததாகவே உணர்ந்தோம். இருந்தும் ஒரு பத்தாண்டுக் காலத்தில் நாம் தோற்றுப் போனோம்.

**ஏன் இந்தத் தோல்வி?**

நாம் தோற்கவில்லை; இது ஒரு பின்னடைவு தான் என்று எம்மை நாமே ஆறுதல் படுத்திக் கொள்வது - நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது போலத் தோன்றுகிறது. பின்னடைவுக்கும் தோல்விக்கும் இடையே தெளிவான வேறுபாடு உண்டு. ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் பின்னடைவு பல்வேறு காரணங்களால் நொதிப்படைந்து, சமர்களில் (Battles) ஏற்படும் தோல்விகளால் கூடுதலாக வெளிப்படும். உதாரணமாக, யாழ்ப்பாணத்தைப் பாதுகாக்கும் சமரில் விடுதலைப்புலிகள் 1995-96 களில் தோல்வியடைந்து வன்னிப் பெருநிலத்திற்குப் பின்வாங்கியபோது போது நாம் தோல்வியடையவில்லை. அது ஒரு பின்னடைவு.

இத்தகைய பின்னடைவு பல விடுதலைப் போராட்டங்களில் ஏற்பட்டவை தான். உதாரணமாக, 1970 களின் பிற்பகுதிகளில் எரித்திரியப் போராளிகள் தலைநகர் அஸ்மாராவைக் கைப்பற்றி வெற்றிக்கனியைப் பறிக்கவிருந்த சமயத்தில் தனது அனைத்துலகக் கூட்டாளிகள் துணையுடன் எதியோப்பியா மாபெரும் தாக்குதல் முன்னெடுப்பைச் செய்தது. இச் சமரில் எரித்திரியப் போராளிகள் தோல்வியடைந்து 'நக்பா' (Nakfa) எனும் வட எரித்திரியப் பகுதிக்குப் பின்வாங்கினர். இது தோல்வியல்ல. ஒரு பின்னடைவு. இப் பகுதியில் இருந்து போரை வழிநடத்தி 1991 இல் தலைநகர் அஸ்மாராவை மீட்டு முழு எரித்திரியாவையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். 1993 இல் எரித்திரியா தனிநாடாகியது.

போராட்டத்தைத் தாங்கி நின்று வெற்றிக்கு வழிவகுத்த 'நக்பா' பிரதேசத்திற்கு நன்றியாகவும், தமது வீரம் செறிந்த போராட்டத்தின் குறியீடாகவும் எரித்திரிய நாணயத்திற்கு (currency) 'நக்பா' எனவும் அவர்கள் பெயரிட்டனர்.

**இதே தர்க்கத்தில், தமிழீழத்தின் நாணயமாக 'வன்னி' ஆக முடியாமல் போனது ஏன்?**

இக் கேள்விக்கு அகப் புறக் காரணங்களை ஆராய்ந்து பதில் தேட இக் கட்டுரைத் தொடர் முனைகிறது.

போராட்டங்களில் ஏற்படும் பின்னடைவின் போது அதே போராட்ட இயக்கம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மீண்டும் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கும். இவ்வாறு சுதாகரித்துக் கொண்டு முன்னேற முடியாத அளவுக்கு போராட்ட இயக்கம் அழித்தொழிக்கப்பட்டுத் துவம்சம் செய்யப்படுமாயின் அதன் பெயர் பின்னடைவு அல்ல. தோல்வி. விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் களத்தில் நடந்தது இது தான்.

போரில் நாம் தோல்வியடைந்திருக்கிறோம் ஆனால் போராட்டத்தில் அல்ல. போராட்டத்திற்கு இது ஒரு பின்னடைவு. ஆனால் ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்கிறது. புதிய வடிவம் எடுக்கிறது. இந்த வாதம் ஓரளவு தர்க்கபூர்வமானது தான். ஆனால்; நமது இலக்கையடையும் முயற்சியினை நாம் கைவிடவில்லை என்பது மட்டும் எடுத்து வந்த முயற்சியில் நமக்குக் கிடைத்த தோல்வியின் பாதிப்பைக் குறைத்து மதிப்பிட வழிவகுத்து விடக் கூடாது. மிகைமதிப்பீடோ அல்லது குறைமதிப்பீடோ மேலும் நமது வீழச்சிக்கே வழிவகுக்கும்.

**ஈழத் தமிழர் வரலாற்றில் இது தான் நமக்கு ஏற்பட்ட முதல் தோல்வியா?**

இது குறித்து 13.12.2009 தினக்குரல் பத்திரிகையில் செல்வராஜா தனபாலசிங்கம் எழுதிய கட்டுரையில் கூறப்பட்ட ஒரு விடயம் நம் கவனத்தை ஈர்க்கிறது.

'இன்று, நேற்றல்ல பல நூற்றாண்டுகளாய் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து தோல்வி அடைந்து வருகின்றனர். ஆதலால் இத்தோல்விகளுக்கான காரணங்களை உள்ளும், புறமும் திறந்த மனதுடன் தேடிக் கண்டறிய வேண்டும். இராமநாதன்களும் தோல்வி கண்டனர், அருணாச்சலங்களும் தோல்வி கண்டனர், பேரின்பநாயகங்களும் தோல்வி கண்டனர், பொன்னம்பலங்களும் தோல்வி கண்டனர், செல்வநாயகங்களும் தோல்வி கண்டனர், அமிர்தலிங்கங்களும் தோல்வி கண்டனர், இறுதியாக பிரபாகரன்களும் தோல்வி கண்டனர். இந்த, ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட தோல்விகள் மட்டுமல்ல, இதற்கு முற்பட்ட நூற்றாண்டுகளும் தோல்விகளின் கதை கூறும் நூற்றாண்டுகளாகவே உள்ளன. ஆதலால் இத் தோல்விகளுக்கான காரணங்களை நீண்ட வரலாற்றுப் பின்னணியில் வைத்து கண்டறிவதன் மூலமே அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நாம் போக முடியும்.' ('தமிழ்க் கூட்டமைப்பின் தயக்கம்;' தினக்குரல் 13.12.2009, பக்கம் 12)

புதினங்கள்

- பீரிஸை வெளியுறவு அமைச்சராக்கியதற்கான ராஜதந்திர இலக்கு
- பல வகுப்பறைகள் மரங்களுக்குக் கீழே நடக்கின்றன
- ஊரான ஊரிழந்தோம்! ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம்!!
- Private: சொல்லப்படாத எங்கள் கதைகள்
- தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
- முள்ளிவாய்க்கால் - மூச்சடங்கிய இறுதிக் கணங்கள்!
- முள்ளிவாய்க்கால் படுகொலையின் தத்துவப் பின்னணி
- கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன்!
- தேசியத் தலைவருக்கு விளக்கு வைக்கத் துடிக்கும் மார்க் அன்ரனிகள்

செய்திகள்

Microsoft OLE DB Provider for ODBC Drivers

error '80040e37'

[Microsoft][ODBC SQL Server Driver][SQL Server]Invalid object name 'tblContents'.

/right-col-secindex.asp, line 132

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு வரலாற்றுத் தோல்வி பற்றிப் பேசுவது சுருண்டு துவண்டு படுப்பதற்கல்ல. மாறாக, இதற்கான காரண காரியங்களை ஆய்வு செய்து அப் பட்டறிவிலிருந்து நமது இலக்கு நோக்கி முன்னேறுவதற்கான திசையைக் கண்டறிந்து அத் திசையில் பயணிப்பதற்காகத்தான்.

தோல்வி மனப்பான்மைக்கும் தோல்வி குறித்த அரசியல் விழிப்புணர்வுக்கும் இடையே வேறுபாடு உண்டு. தோல்வி மனப்பான்மை சரணாகதியை நாடிச் செல்லும். தோல்வி குறித்த அரசியல் விழிப்புணர்வு போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்;து ஆக்கபூர்வமாகச் சிந்திக்கும். தோல்வி மனப்பான்மை சமூக வளர்ச்சிக்குப் பாதகமாக அமையும். தோல்வி குறித்த அரசியல் விழிப்புணர்வு வரலாற்றை முன்னோக்கித் தள்ள உந்து சக்தியாக விளங்கும். தோல்வி குறித்த அரசியல் விழிப்புணர்வின் பாற்பட்டுத்தான் இத் தொடர் கட்டுரை எழுகிறது.

ஒரு மேலாதிக்கத்தை நமது பொது அறிவு (commonsense) எதிர்ப்பின்றி இயல்பாக ஏற்றுக் கொண்டுவிடின் அங்கு மேலாதிக்கம் (hegemony) நிறுவப்பட்டுவிடும். சிறிலங்காவின் சிங்கள ஆட்சியை ஈழத்தமிழரின்; பொது அறிவு எதிர்ப்பேதுமின்றி இயல்பாக ஏற்றுக் கொண்டுவிடின் சிங்கள மேலாதிக்கம் வெற்றி பெற்றுவிடும். தோல்வி மனப்பான்மையும் எம்மால் இனியேதும் செய்யமுடியாது என்ற கையறுநிலையும் சிங்கள மேலாதிக்கத்தை இயல்பாக ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்குத் தள்ளிவிடவும்கூடும்.

இதனால் தோல்வி பற்றிப் பேசுவது குறித்து சிலர் அச்சமுறுகின்றனர். தோல்வி பற்றிப் பேசுவதே சிங்கள மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளத் துணைபுரிந்து விடும் என இவர்கள் வாதிடுகின்றனர். பல்வேறு வாதங்களைக்கூறி விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை இவர்கள் உயிரோடு வைத்திருக்க முனைவதன் அரசியல் காரணம் இங்கிருந்தும் தான் எழுகிறது. 2009 ஆண்டு மே மாதம் முதல் வாரம் நண்பர் ஒருவர் கூறிய வார்த்தை நினைவுக்கு வருகிறது. 'இப்போதைக்குத் தலைவர் தப்பி விட்டால் போதும். அவர்கள் வெற்றி கொண்டாட முடியாது'. தற்போது அவர்கள் வெற்றி கொண்டாடி முடித்து விட்டனர். உலக நாடுகள் அனைத்தும் பிரபாகரன் மறைவை தமது ஆவணங்களில் ஐயம் திரிபறக் குறித்துக் கொண்டும் விட்டனர். ஆனால் எம்மவர்களில் சிலர் தலைவர் உயிரோடிருந்து போராட்டத்தை வழிநடத்துவதாகவும் உரிய நேரத்தில் வெளியே வருவார் எனவும் கூறிக் கொண்டிருக்கின்றனர். இந்தப் போக்கு நமக்கு எந்த வகையிலும் ஆரோக்கியமாக இருக்கப் போவதில்லை. நாம் ஓர் அறிவுபூர்வமான சமூகம் என்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறியுமல்ல.

Tamil Nation இணையத்தின் ஆசிரியரும் அறிஞருமான, திரு நடேசன் சத்தியேந்திரா அவர்கள் பிரபாகரனின் மறைவுக்கு மரியாதை செலுத்தி தனது இணையத் தளத்தை 30 நாட்கள் மூடி வைத்திருந்தார். இது குறித்து தனது இணையத்தில் அவர் 18.06.2009 அன்று பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

”Tamilnation.org கடந்த ஒரு மாத காலமாக – வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் மறைந்த 17.05.2009 க்கு அடுத்த தினத்திலிருந்து 30 நாட்களுக்கு தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்தது. இது இனிவரும் தலைமுறைத் தமிழர் நெஞ்சமெல்லாம் அந்நிய ஆட்சிக்கு எதிரான தமிழர் போராட்டத்தின் குறியீடாக, காலத்தால் சாவடையாது நிறைந்து வாழப் போகும் ஒரு தேசியவீரனின் மறைவுக்கு மரியாதை செலுத்துதற்கான காலமாகும். இத்தகைய மரியாதைக் காலங்கள் துயர்பகிர்தலுக்கு உரியவை மட்டுமல்ல. நாமெல்லாம் நம்மை நாமே உள்ளுணர்ந்து கொள்வதற்கானவையுமே.. ” (http://www.tamilnation.org/comments.htm) – (மொழிபெயர்ப்பு கட்டுரையாளருடையது)

இக் கட்டுரையின் மையமாக ஈழத் தமிழர் தேசத்தின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் அமைகிறது. இதனால் கட்டுரையின் முக்கிய பேசுபொருளாக விடுதலைப்புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் அவரது அரசியலும் அணுகுமுறையும் அமையப் போகிறது. பிரபாகரன் அவர்களது வீரச்சாவினை ஏற்று - ஒரு போராளியாக - ஈழத்தமிழர் தேசத்தின் தலைவராக - தனது சரிகளோடும் தவறுகளோடும் அவர் வாழ்ந்த ஏறத்தாழ 4 தசாப்த கால போராட்ட வாழ்வுக்கு இக் கட்டுரை மதிப்பளிக்கிறது.

இதே வேளை எந்த அரசியல் மாந்தரையும் அவரவர் வகித்த அரசியல் பாத்திரங்களையும் சமகாலத்தில் மட்டும் வைத்து எடைபோட முடியாது. வரலாறு தான் இதனை எடை போட வேண்டும். அவர்கள் தேசிய வீரர்கள் எனக் கௌரவிக்கப்படுவதும் குற்றவாளிகள் எனத் தண்டிக்கப்படுவதும் நிரபராதிகள் என விடுதலை செய்யப்படுவதும் வரலாற்றின் போக்கிலேயே தீர்மானிக்கப்படும். வரலாற்றின் இப் பாத்திரம் தொடர்பான கவனத்தையும் இக் கட்டுரைத் தொடர் தன்னகத்தே கொண்டுள்ளது.

எக் காரணத்திற்காகவும் மக்களை போலி நம்பிக்கைக்குள் ஆழ்த்துவதை இக் கட்டுரை கடுமையாகக் கண்டிக்கும். இயன்ற வரை உண்மைகளைத் தேடித் திரட்டி அவற்றைப் பகுப்பாய்வு செய்து கருத்துக்களாக முன் வைக்கும். உண்மைகளின் சார்புத்தன்மை குறித்த அக்கறையும் இக் கட்டுரைக்கு உண்டு. இதனால் தனது 'தகவல் மூலம்' தொடர்பாகவும் தனது சார்புத் தன்மை தொடர்பாகவும் கேள்வி எழுப்பி எழுப்பி - அதனைத் திரும்பிப் பார்த்துப் பார்த்தே இக் கட்டுரையாளர் கட்டுரையினை எழுதுகிறார். பிரெஞ்சு அறிஞர் பியரே போர்டியோ (Pierre Bourdieu) கவனத்திற் கொண்ட methodological reflexivity இக் கட்டுரை தொடர்பில் ஓரளவுக்காவது பயன்படுத்தப்படுகிறது.

மேற் குறிப்பிடப்பட்ட தினக்குரல் கட்டுரையில் குறிப்பிட்டவாறு, நூற்றாண்டு காலத் தோல்விக்கான காரணங்களை இக் கட்டுரை ஆய்வு செய்யவில்லை. ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் 2000 – 2009 ஆண்டுவரையிலான காலப்பகுதியையே இக் கட்டுரைத்தொடர் தனது காலவெல்லையாகக் கொள்கிறது. இருந்தும் தேவையேற்படின் பின்னோக்கியும் முன்னோக்கியும் பயணித்து மீளவும் தன்னிடம் நோக்கிக் கட்டுரைத்தொடர் திரும்பும். ஒரு காலஅட்டவணை ஒழுங்கிலும் (chronological order) இக் கட்டுரை பயணிக்கப்போவதில்லை. தான் கூறமுனையும் விடயத்திற்குத் தேவையான உதாரணங்களையும் அனுபவங்களையும் வெவ்வேறு காலப்பகுதியிலிருந்து திரட்டி வரும்.

இக் கட்டுரை அரசியல் விவாதங்களை ஊக்குவிக்கிறது. இக் கட்டுரைத் தொடரில் குறிக்கப்படும் கருத்துக்களுக்கு மாற்றான கருத்துக்களும் எழுதப்படும் போதே அரசியல் விவாதங்கள் பிறக்கும். ஆக்கபூர்வமன விவாதங்கள் அறிவுக் கண்ணைத் திறக்கும்.

இக் கட்டுரைத் தொடரில் தனிப்பட்ட வசைபாடல்கள், சேறுபூசல்கள் இடம் பெற மாட்டாது. இதே போன்று விவாதங்களும் நாகரீகமான முறையிலேயே அணுகப்படும். பொங்கலன்று ஆரம்பமாகும் இக் கட்டுரைத் தொடர் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் வெளிவரும்.

23.01.2010 சனிக்கிழமை அன்று இக் கட்டுரைத்தொடரின் முதல் அங்கத்துடன் சந்திப்போமோ நண்பர்களே! நன்றி.

1/12/2010 5:27:23 PM

**உங்கள் கருத்துக்களை பதிவு செய்க:**

பெயர்

ஊர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடு

மின்னஞ்சல்

கருத்து (max. 2000 characters)

அ Press F8 for English Powered by Quillpad

படத்தில் உள்ள எழுத்துக்களை பதிவு செய்க:

Change Image

Send Comment

## மேலும்

- தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
- போராளிகள் குறித்து தலைவர் பிரபாவின் கவலை - தொடர் - 16
- புலிகளின் கடல்வழி விநியோக நுட்பங்கள்! கட்டுரைத் தொடர் - 15
- புலிகளின் மரபுப் போர்த் தகமை வளர்ந்தது எப்படி? கட்டுரைத்தொடர்- 14
- கிட்டுவை தமிழீழம் இழந்த கதை! கட்டுரைத் தொடர் - 13
- ராஜீவ் கொலைச் சம்பவம் ஏன் நிகழ்ந்தது? கட்டுரைத் தொடர் - 12
- சிறிலங்கா + தமிழீழம் = - இந்தியா: கட்டுரைத் தொடர் - பகுதி 11
- ஒஸ்லோ 'பிரகடனத்தை' புலிகள் ஏற்றார்களா? இல்லையா? பகுதி 10
- சிறிலங்கா - தமிழீழ முரண்பாட்டின் புவிசார் அரசியல் அடிப்படை- பகுதி 9
- இந்திய - தமிழீழ புவிசார் அரசியல் முரண்! ஈழம்: கட்டுரைத் தொடர் - 8

»மேலும் சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்